## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.24/2021

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 –ம் நாள் வாதிகள் தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கணேசன் (PW –1) | வயது | : | 66/2026 |
| க/த பெயர் | : | திரு. வேலாயுதம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | நெருஞ்சினகுடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நாங்கள் ஊர் பிரதிநிதித்துவ வகையில் வழக்கு தா்கதல் செய்துள்ளதால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்துக்களான குளங்களை பஞ்சாயத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் வழக்கு தாக்கல் செய்துள்ளபோது பஞ்சாயத்து தலைவர் இருந்தார் தற்போது தலைவர் பணியிடம் காலியாக உள்ளது என்றால் சரிதான்.

2. பிரதிவாதிகள் எங்களுக்கு எந்தவித பிரச்சனையும் தராததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களான குளங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமானது என்றால் சரியல்ல, எங்கள் கிராம கோவிலுக்கு சொந்தமான குளம். அந்த குளங்களை அரசாங்கம் பாசி குத்தகை விடுவது எங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் சரிதான். எங்களது தனிப்பட்ட வெறுப்பு விருப்புகளுக்கு உட்பட்டு எதுவும் செய்யமுடியாது என்றும் அரசாங்கத்தின் செயல்களுக்கு கட்டுப்படுவது எங்களது கடமை என்றால் சரியல்ல.

3. நெருஞ்சனக்குடி கிராம மக்களின் அனுமதி இல்லாமல் எங்களது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால்

பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 15:56:28 +0530

District Munsif
Mannargudi.